115

ஸ்ரீ

கெருடப்பத்து.

கஜேந்திர மோக்ஷக் கீர்த்தனையும்

அடங்கி யிருக்கின்றன.

5 OCT 1932

...வதி அச்சுக்கூடத்தில்
...ிக்கப்பட்டது.

923:417,
N32
172515

ஸ்ரீ

கெருடப்பத்து.

கஜேந்திர மோக்ஷக் கீர்த்தனையும்

அடங்கியிருக்கின்றன.

5 - OCT 19

ஸ்ரீ பத்மாவதி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1938
2515791 : 0954

ஸ்ரீ

கெருடப்பத்து.

ஓம்-பூரணமேபதினாறு திங்கட்சேரும்
பொருந்தியே யருக்கன் பதினெட்டுஞ்சேருங்
காரணனேகரிமுகில்போல் மேனிசேருங்
கருணைபெருமஷ்டாக்ஷரங் கலந்துவாழும்
மாரணனேலட்சிமியோ டெட்டும்சேரும்
மதிமுகம்போல்நின்றிலங்கு மாயாநேயா
ஆரணனேரகுராமா கெருடன்மீதில்
அன்புடனே யேரிவந் தருள்செய்வாயே 1

மந்திரமேவஷ்டசித்து மெட்டுஞ்சேரும்
வாழ்கிரகமொன்பதுமே வந்துசேரும்
கந்திருவர்கணநாதர் ராசிவர்கம்
கலைக்கியானநால்வேதங் கலந்துவாழும்
நந்திமுதல்வேதர்களுங் கவனயோகம்
நமஸ்கரித்துபரமே நாளும்போற்ற
அந்தரமாய் நிறைந்திருக்குங் கெருடன்மீதில்
அன்புடனேயேரிவந் தருள்செய்வாயே. 2

மூலமுதலோரெழுத்து நீர்தானாகுப்
மூன்றெழுத்து மைந்தெழுத்து மொழியலாமோ
சீலமுதல்-ஓம்-அங்-உங்-யங்-றிங்கென்ற
சிவனுடைய திருநாமம் நீர்தானாகும்
காலமுதல்-உங்-அங்-உங்-மங்-றிங்கென்ற
கருணைபெருமிவ்வெழுத்து நீர்தானாகும்
ஆலவிஷங்கையேந்துங் கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே. 3

கெருடப்பத்து.

ஐயென்றுங்கிலியென்றும் ஓம்-சிவாவென்றும்
நமநமசிவசிவ ராமாவென்றும்
நமவென்றுமோங்கார ரீங்காரமென்றும்
தவமுடையவிவ்வெழுத்தும் நீர்தானாகும்
ஓமென்று நமோ நமோ நாராயணா வென்றும்
உன்பாதமுச்சரித் துகந்துபோற்ற
அல்லவென்று ரகுராமா கெருடன்மீதில்
அன்புடனே யேரிவந் தருள்செய்வாயே. 4

உதிக்கின்றசிவசொரூப முனக்கேயாகும்
ஓம்-அவ்வுங்-உவ்வுங் கிலியுமென்றே
பதிக்கிசைந்த வைந்தெழுத்தை வெளியில்விட்டே
பச்சைமுகில் மேனியனே பணிந்தேனுன்னை
விதிக்கிசைந்த மெய்பொருளே அரிகோவிந்தா
விளக்கொளிபோல் மெய்த்தவமே விரும்பித்தாதா
அதற்கிசைந்த நடம்புரியும் கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே. 5

வேதமுதலாயிருந்த சிங்கரூபம்
விளங்குகின்ற இரணியனை வதைசெய்தாய்
பூதமுதலாம்பிறவும் புண்ணியனேயா
புகழ்ந்தவற்குத் துணைவருவ யசோதபுத்ரா
நாதமுதல்விந்துவா யுயிருக்கெல்லாம்
நயம்பெறவே நிறைந்திருக்க வாதபிர்ம
யாதவன்போல் நிறைந்திருக்கும் கெருடன்மீதில்
அன்புடனே யேரிவந் தருள்செய்வாயே. 6

முக்கோண நார்கோண மொழிந்தைங்கோண
முச்சுடரே யருகோண மென்கோணமாகும்
சட்கோண நாற்பத்துமூன்று கோணமாகும்
தந்திரமுஞ் சிதம்பரமுஞ் சகலசித்து
இக்கோண மிதுமுதலாய் தாரகமட்டும்
இறைவனாய்த் தானிருந்து ரட்சித்தாலும்
அக்கோணமீதிருந்து கெருடன்மீதில்
அன்புடனே யேரிவந்தருள் செய்வயே 7

பச்சைமுகில்மேனியனே யுனக்கேயீர்த ப்
பார்த்தனிலேபத்தவ தாரமுண்டு
மச்சமென்றும் கூர்மமென்றும் வாரகமென்றும்
வாமனென்றும் ராமனென்றும் பவுத்தனென்றும்
துஷ்டரையடக்க மோகினி வேஷங்கொண்டாய்
தோன்றினலுன் சொரூபமெல்லா மரிவாருண்டோ
அச்சந்தீர்த்தென்னையாளக் கெருடன்மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய்வாயே. 6

வதியனாய்த் தோன்றிவந்தாய் மாயெலிக்கு
விண்ணவர்காய் நரசிங்க ரூபமானாய்
சாதியிலே யாதவனாய்க் கிருஷ்ணனாகத்
தானுதித்து வந்திருந்தாய் தரணிவாழ்க
சோதனைகள் பார்த்திடுவோர் துதிப்போத்தம்மை
துஷ்டரையும் வதைசெய்து லோகமாள்வாய்
ஆதிமுதலோரெழுத்தே கெருடன்மீதில்
அன்புடனே யேரிவந்தருள்செய்வாயே, 9

600 008

மாயவனே ரகுராமா அருகேவாவா
வஞ்சனைகள் பரந்தோட நெஞ்சில்வாவா
காயாம்பூ நிறமுடனே கனவில்வாவா
கருமுகில் மேனியனெ யென்கருத்தில்வாவா
நாயகனே யென்னாவி லிருக்கவாவா
நாடோறுமுன்பாதந் துதிக்கவாவா
ஆயர்குலத்துதித்தவனே கெருடன்மீதில்
அன்புடனேயேரிவந் தருள்செய்வாயே. 10

முப்புரத்தில் வந்தவனெ யிப்போவாவா
முகிலநிறனே செகநாதா முன்னேவாவா
எப்பொழுதுந் துதிப்பவர்கள் பங்கில்வாவா
ஏழைபங்கிலிருப்பவனே யிறங்கிவாவா
ஒப்பிலாமணிவிளக்கே யொளிபோல்வாவா
ஓம்நமோ நாராயணா வுகந்துவாவா
அப்பனேரகுராமா கெருடன்மீதில்
அன்புடனே யேரிவந் தருள்செய்வாயே. 11

துளபமணிமார்பழகா சுகத்தைதாதா
சுருதியே மெய்ப்பொருளே வாத்தைதாதா
களபகஸ்தூரியனே கடாட்சந்தாதா
கஞ்சனைமுன்வென்றவனே கருணைதாதா
பழம்பொருளேசிவஜோதி பாக்யந்தாதா
பத்திமுத்திசெய்யவுன் பாதந்தாதா
அளவிடாமெய்ப்பொருளே கெருடன்மீதில்
அன்புடனேயேரிவந் தருள்செய்வாயே. 12

கெருடப்பத்து முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

கஜேந்திர மோக்ஷக் கீர்த்தனை.

இ-ம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

மூலமென்றழைத்த யானையைக் காத்தருள்
முகுந்தனைப்பணி நெஞ்சே.

அநுபல்லவி.

சீலமேவும் பத்மாசனன் வணங்கும்
திருவரங்கத் தரவணைமிசை யுறங்கும்
நீலமேனியனே நிறைபரஞ் ஜோதி
நித்தியநிர்மல நிரம்பியே ஆதி (மூல)

சரணங்கள்.

மழையெனமும்மதம் பொழியும் விகடகட
மத்தகசங்கள் கோடி-இரு
மருங்குமணியணியாய் நெருங்கித் தொடர்ந்து
வரவனத்தினில் நடந்தோடி
எழுகடலாமென அலைகள்பொன்மணிகொழித்
தெரியும்மடுவைக் தேடி-வண்
டிசைக்கக்குலம் விண்டுசுரக்குந் செந்தே
னிறைந்தினித்த தண்புனல் நாடி
அழகோடிறங்கியதில் முழுகியேபைய
அலைப்பத்தனியப்பல்ல ஜலக்கிரீடைசெய்ய
முதலைபிடித்தள கதறியேயுய்ய (மூல)

காலனைப்போலுக்க மானகராவினைக்
கண்டகஜேந்த்ரன் நிட்டோடி-வெகு
காலமனுவளவும் வெறுப்புச் சலிப்பில்லாமல்
கடுமையோ டோடி
ஸ்தூலசிகரபேரு விருகாலுஞ்
சுப்பல்போல் வாடிக்-காலது
தூவண்டுபராக்கிரமங் குறைந்துநடுங்கிவிழி
சொருக்கி கண்மூடி
ஞாலமேலிளைத்த தீவினைப்பழுது
நமக்கென்றுதரைமிசைத் துதிக்கைவைத்தழுது
ஓலமிட்டண்ட சராசரமுழுதும்
உடையவனெவனதன் கதியென்று தொழுது (மூல)
அடித்தது செவியில்வந்து நுழைய-அபய
மென்று மந்தக்குரலைக் கேட்டு-பால
அலைத்தவழாழியிற் பெரியபிராட்டியோ
டாடியவினை யாட்டு
விடுத்துகெருடனுமே லேறியாயிரம்படம்
விரித்தெழும்பணிச் சூட்டுச் சேஷ
மெத்தைதுறந்துதிரு மார்பிற்பளபளன
விளங்கியவெழில் காட்டி
வடத்தணிகவுஸ்துவ மசயப்பொன்னுடை
வயங்கப்பசுந்துளபப் பரிமளவாடை
எடுத்திடவுருவஞ்செந் தாமரையோடை
ஏளச்சிறந்திடக்ஷணத் தொழிந்திடப்பீடை (மூல)
மிக்கச்சூரியனுந்தன் னொளிமழுங்கிப்பிர

172515

மித்துக்கண்கள் ... க்ஷ-முடி
மீதுகவித்தநவ ரத்னநெடுமகுடம்
விண்ணிடை வெளியில்வீச
ஏறிமணிப்பிரபை திகழ்வாகுவலயமேகக்
இந்திரனுமிசை யேகக்கையில்
ஏந்தியபாஞ்ச சந்நியஞ்சக்ராயுத
மிலங்கிடக் கைலாச
வரையுறைசிவன்முத லோரிஷவன்ன
மாயமோவென்ரிசைஞ்சி துதிகள்பண்ண
திருமுகம் வேர்த்துளங் குறுநகைதன்னச்
சித்திரமிரங்கிக்கிருபை பெருகியேமின்ன (மூல)

காதிற்குண்டல ஜோதியினலிருள்
பாதலத்தகன் றோட-மிகக்
ககனவர்மலர்மாரி சொரியத்-தேவ
கானக்கின்னரர் பாட்க்
கோத்தவயிற்றில்வைத்திட்டு சகலவண்டமுந்
குலுங்கநான்மறை தேடச்-செழும்
கொத்துமலர்மாலை சரித்திட-அந்தா
தும்துபியொலி வெகுவாய்நீதி
மாதவர்களித்தாட வேகமொடுசென்று
மரகதமலைபோலெதிர் நின்று
நீதிகைத்தஞ்சாதே யஞ்சாதேயென்று
நெடியமுதலையைகொன் றிடர்தொலைத்தன்று (மூல)

கஜேந்திரமோக்ஷக் கீர்த்தனை-முற்றிற்று.

முக்கியகவனிப்பு.

ஸ்ரீ வேங்கடேசபெருமாளுடைய சரித்திரத்தையும் ஸ்ரீ அலுமேலுபத்மாவதியார் ஜன்மித்து ஸ்ரீ வெங்கடேசபெருமாள் திருகல்யாணம் செய்துகொண்ட சரித்திரம் திருப்பதி திருமலை முதலிய ஸ்தலங்களிலிருக்கும் தீர்த்த மகிமை, அநேகமான பக்தர்கள் தீர்த்த யாத்திரைசெய்து மோக்ஷமடைந்தவர்களுடையபெயர்களும் ஸ்ரீ ஸ்வாமிகளுடைய லீலைகளும் அநேகமான புண்ணிய கனதனவான்கள் செய்யப்படும் தர்மகைங்கர்யங்களும் அவர்கள் அமைத்திருக்கும் சத்திரங்களும் அன்னதான சத்திரங்களும் அமைத்துவைக்கப்பட்டவர்களுடைய பெயர்களும் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு வருஷந்தோரும் நடந்துவரும் பிர்மோத்சவங்களும் வசந்தோச்சவம் நித்யோச்சவம் திருப்பதி திருமலை திருச்சானூர் வகைரா யிடங்களில் தேவஸ்தானத்தில் செலுத்த வேண்டிய விபரங்களும் அதின் மூலம் ஒவ்வொரு விஷயங்களும் எவ்வளவுதுகை கட்டவேணுமென்ற விபரங்களும் மேல்கண்ட புஸ்தகமூலமாய் தெரிந்துகொள்ளலாம். புஸ்தகம் 1-க்கு விலை 0—6—0.

விலாஸம்- மாரிசெட்டி ருத்திரைய்ய நாயுடு,
புஸ்தகவியாபாரம், திருப்பதி.